

# சரணம் என்று இறுகப் பற்றிக்கொள்



பகவான் புத்தரைத் தரிசித்துவிட வேண்டும் என்கிற வெறியுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டான் அந்த இளைஞன். தனிமையில் தவிக்கப் போகும் தனது வயதான தாயைப் பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை.

அவன் எங்கு போனாலும் புத்தர் அங்கிருந்து கொஞ்சம் முன்பாகத்தான் புறப்பட்டுப் போனார் என்று ஒரே பதில் கிடைத்தது. அவன் மனம் துவண்டு போனது. வழியில் தாம் சந்தித்த மற்றொரு மூத்த புத்த சந்யாஸியிடம் பகவான் புத்தரைத் தரிசிக்காமலே தன் வாழ்வு முடிந்து விடுமோ என்று கதறினான்.

முதிர்ந்த அந்த சந்யாஸி அன்புடன் அவனது கரங்களைப் பற்றி ஆறுதல் கூறினார். “வருத்தப்படாதே மகனே.... உன் வீடு திரும்பு... நீ புத்தரைத் தரிசிக்கும் பாக்யம் உள்ளவன் என்றால் எப்படியும் தரிசிப்பாய். புத்தர் கருணையானவர் ” என்றார். அவனோ... “ஐயா... நான் முன்பின்னாகப் புத்தரைப் பார்த்ததே இல்லை. வழியில் எங்காவது திடீர் என்று புத்தரைக் காண நேர்ந்தால் நான் எப்படி அவரை அடையாளம் கண்டுகொள்வேன். தவற விட்டுவிடக் கூடாதே” என்று அழுதான்.

“மகனே! வழி முழுவதும் சந்திப்பவர்கள் கால்களை உற்றுநோக்கியபடி போ... யார் தமது வலது கால் செருப்பை இடது காலிலும் இடதுகால் செருப்பை வலதுகாலிலும் அணிந்திருக்கிறாரோ அவரே புத்தர்... அந்தத் திருவடிகளைச் சரணம் என்று இறுகப் பற்றிக்கொள் ” என்று அதிசயமான அடையாளம் ஒன்றைச் சொல்லி அனுப்பினார்.

வழி முழுவதும் அவ்வாறு பார்த்தபடியே தன் ஊர் திரும்பினான். அவனது துரதிருஷ்டம் ஒருவர்கூட அப்படிக் காட்சி அளிக்கவே இல்லை. தனக்கு நல்லருள் கிடைக்கவில்லையே என்று வருந்தியபடி தன் வீடு வந்து கதவைத் தட்டினான். அவனது அழைப்பொலியைக் கேட்டதும், அடிவயிற்றில் பிள்ளை உதைத்த போது உணர்ந்த ஆனந்த உணர்வுகளுடன் அவன் வயது முதிர்ந்த தாய் ஓடோடி வந்து வாசற் கதவுகளைத் திறந்து கண்ணீருடன் மகனை வரவேற்றாள். இனி புத்தரைக் காணவே முடியாது என்று தன் சகல நம்பிக்கையையும் இழந்திருந்த மகன், கதவைத் திறந்த தன் தாயின் கால்களைப் பழக்க தோஷத்தால் கவனித்தான். என்ன ஆச்சர்யம்? அவள் வலது காலில் இடது கால் செருப்பும், இடது காலில் வலது கால் செருப்பும் இருந்தன. கதவைத் தட்டிய மகன் திரும்பிப் போய்விடக் கூடாதே என்ற பதற்றத்தினால் பதறியபடி எழுந்தோடி வந்தவள் காலில் செருப்பு மாறி அணிந்து கொண்டதை அறியப் போகிறாளா என்ன ?

மகனுக்கு மூத்த சந்யாஸியின் சொல் நினைவில் மின்னியது. மெலிந்து மூத்த பாசத்தால் நடுங்கும் தாயின் மெல்லிய பாதங்களைக் கட்டிக்கொண்டு, **‘‘பகவானே’’** என்று அழத் தொடங்கினான். **புத்தரை விடவும் கருணையானவர் தாயாக மட்டும் தானே இருக்க முடியும் ?**

# NEVER REPEAT THE SAME MISTAKE

**'வாழ்வில் திட்டமிடத் தவறுகிறபோது, தவறு செய்யத் திட்டமிடுகிறோம் என்று பொருள் '.** ஒரு நாளில், நாம் செய்ய வேண்டிய சின்னத் திட்டமிடலில் தொடங்கி, முழு வாழ்க்கைக்குமான பெரிய திட்டமிடல்கள் வரை நமக்கு எவ்விதமான முன்யோசனைகளும் இருப்பதில்லை. " All Mistakes are lessons " என்பதைக்கூட மறந்துவிட்டு புலம்பித் தீர்க்கிறோம்.

தொடர்ச்சியான பயிற்சியில்தான் கட்டுப்பாடான வாழ்க்கை சாத்தியமாகும்.

'ஒருமுறை கடலில் மூழ்கி, நாம் முத்தெடுக்காமல் திரும்பினால், கடலில் முத்துக்கள் இல்லை என்று பொருள் இல்லை. நம்முடைய முயற்சி போதவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.'

**தவறுகள்... வருந்துவதற்காக அல்ல, திருந்துவதற்காக!**



*I Can't*

*change the direction*

*of the wind*

*but I can adjust the sails*

*to reach my destination.*

# LEARN DIFFERENCES THAT MAKE A DIFFERENCE !

# YOU CANNOT BE ANYTHING

# IF YOU WANT TO BE EVERYTHING

**சின்ன விஷயத்திற்கு சிரத்தை எடுப்பவர்கள்தான் சிகரத்தை எட்டுகிறார்கள்**

**LEARN TO SAY SORRY - WHEN IT IS YOUR FAULT AND EVEN WHEN IT IS NOT YOUR FAULT**

# TEN COMMANDMENTS FOR A STUDENT

1. Let your main aim be "STUDY" - others are only secondary during your college life.
2. Don't be a bookworm. Try to show your skill atleast in any one extra curricular activity.
3. Keep your class room clean. This 'Clean' habit will mould you good in the longer run.
4. Develop healthy friendship with others. Good friends are your assets always.
5. Respect your teachers. Their blessings are essential for your prosperous career.
6. Love your college deeply. Your life in this college will be ever remembered.
7. Achieve something. Your college should remember you for ever.
8. Handle cell phone, television, computer judiciously. Don't become an addict.
9. Remember always - character is more important than anything.
10. After completing your course and once you are settled in life, provide any financial help to a poor student of your college. "Let noble things spread."

# TEN COMMANDMENTS FOR A STUDENT

1. Let your main aim be "STUDY" - others are only secondary during your school life.
2. Don't be a bookworm. Try to show your skill atleast in any one extra curricular activity.
3. Keep your class room clean. This 'Clean' habit will mould you good in the longer run.
4. Develop healthy friendship with others. Good friends are your assets always.
5. Respect your teachers. Their blessings are essential for your prosperous career.
6. Love your school deeply. Your life in this school will be ever remembered.
7. Achieve something. Your school should remember you for ever.
8. Handle cell phone, television, computer judiciously. Don't become an addict.
9. Remember always - character is more important than anything.
10. After completing your course and once you are settled in life, provide any financial help to a poor student of your school. "Let noble things spread."

SRI AYYAPPA SANGAM, Tiruchirappalli - 620 001

# LINKING OPTIMISM TO REALITY IS THE WAY TO SUCCESS

# உங்களைப் பற்றி மற்றவர்களின் கருத்து

(உங்களுடைய நண்பர்களிடம் / உறவினர்களிடம் இதைக் கொடுத்து பூர்த்தி செய்யச் சொல்லி தங்களின் குறை நிறைகளை தெரிந்து கொள்ளலாமே!)

**From:**

**To :**

| தங்களிடம் எனக்குப் பிடித்த பத்து விஷயங்கள் | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

| பிடிக்காத விஷயங்கள் | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |

# ஐ.டி. துறை அன்பர்களுக்கு அறிவுரை !

நீங்கள் கூடுதல் புத்திசாலிகள் – கெட்டிக்காரர்கள். எந்த ஒரு விஷயத்தையும் பளிச்சென்று பிடித்துக் கொள்ளும் கூர்மதி உங்களுடையது. வெற்றி என்பது உங்களுக்கு ஒரு விளையாட்டுப் பொருள். வாழ்க!

பணம் மட்டுமே வாழ்க்கை அல்ல! உங்களின் பெற்றோர் தங்களது பணிக் காலத்தின் இறுதியில் வாங்கும் ஊதியத் தொகையை, நீங்கள் முதல் மாதமே வாங்கி விடலாம். அதற்காக, அவர்களை விடவும் நீங்கள் அதிபுத்திசாலி என்றோ, திறமையாளர் என்றோ, பெரிய மனிதராகவோ எண்ண வேண்டாம்.

உறவினர்களை அற்ப ஜந்துக்கள் போல நினைக்க வேண்டாம். தம்பி – தங்கைகளைப் படிக்க வைக்க நிறைய செலவு செய்யுங்கள். குடும்பத்தின் பந்த பாசத்தை இணைய தளத்தில் டௌன் லோட் செய்ய முடியாது!

வெளிநாட்டுப் பணம் வரலாம்........ வெளிநாட்டுப் பண்பாடு வரலாமா? பிற மனிதர்கள் எல்லோருமே நாம் பயன்படுத்திக் கொள்ள மட்டும் அல்ல!

பத்து ரூபாய் கூடுதல் சம்பளம் என்றதும் கம்பெனியைக் கைகழுவுவது கொஞ்ச காலம் பெருமையாகத் தெரியலாம். ஆனால், ஒரு நாள்..... இந்தத் துறையின் செயல்பாடே இதனால் ஸ்தம்பிக்க வாய்ப்பிருக்கிறது.

உணவு, உறக்கம், ஓய்வு, காலா காலத்தில் இல்லாதபடி உடம்பை – மனதைச் சீர்குலைத்தால், 40 வயதுக்குப் பிறகு உயிர் வாழ்வதே பிரச்சனையாகி விடும். யோசியுங்கள்.

எப்போதும் ஏ.ஸி–யில் இருப்பதால், உங்களுக்கு வியர்வையே வருவதில்லை. அது, உடலுக்குக் கெடுதல். உடலை வியர்க்க விடுங்கள். தண்ணீர்த் தாகம் எடுக்காத போதும் நீர் அருந்துங்கள். கண்ட கண்ட குளிர்பானங்கள் குடிப்பதை விட்டு விட்டு, எலுமிச்சை, ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை சாறு அருந்துங்கள். பார்லியும் சேர்த்துக் கொள்ளுங்கள். தினந்தோறும் நிகழ வேண்டிய காலைக் கடனை முடிக்க மாத்திரைகள் சாப்பிடுவதும் நல்லதல்ல. கண்களிலும் கவனம் வையுங்கள்.

உட்கார்ந்தே இருப்பதால் எடை கூடும்; சர்க்கரை அதிகரிக்கும். கொலஸ்ட்ராலும் பழுத்துக் கிடக்கும். மூளைக்கு வேலை என்பதால் ரத்த அழுத்தமும், சக்கைப் போடு போடும். எல்லாவற்றையும் எதிர்பார்த்து வெற்றி கொள்ளுங்கள்.

காதலிக்கும்போது அல்லது திருமணத்துக்குப் பெண் தேடும் போது.......சம்பளம், வேலை வாய்ப்பு, செலவழிக்கும் இயல்பு போன்றவற்றை இரண்டாம்பட்சமாக வைத்துக் கொண்டு, ஒழுக்கம், குணம், பண்பாடான குடும்பம் ஆகிய விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

**“இன்று போலவே என்றும் சம்பளம் வரும்”** என்று கனவு காணாதீர்கள். சிக்கனமாக செலவழிக்கப் பழகுங்கள். உங்களால் அதிகம் செலவழிக்க முடியும் என்பதற்காக, சிரமப்பட்டு சம்பாதிப்பவர்களது மனம் புண்படும்படி ஜம்பம் அடிக்காதீர்கள். அந்நிய நாட்டின் தயவில் அதிகம் சம்பாதிப்பவர்களாகிய பலரும் இந்த நாட்டு வெற்றிக்கு உழைப்பவரை இளக்காரமாக நினைக்காதீர்கள்.

வெளிநாடுகளில் வேலை பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பும்போது, ஓட்டல்களில் தங்கிக்கொண்டு ............ உறவினர்களை – அம்மா – அப்பாவை, “என்னால் வர முடியாது, இங்கு வந்து பார்.... ஆட்டோவுக்கு வேண்டுமானால் காசு தருகிறேன்!” என்று கூறி அசிங்கப்படுத்தாதீர்கள். பணத்தை விட ரத்தம் கனமானது.

வெளிநாடுகளில் பிறந்து வளரும் குழந்தைகளுக்கு எதிர்ப்புச் சக்தி குறைவு என்பது உண்மைதான், என்றாலும் சிறிது நேரமாவது தாத்தா – பாட்டி..... அதாவது உங்களின் பெற்றோர், உங்கள் பிள்ளையைக் கொஞ்சுவதற்கு – உணவு ஊட்டுவதற்கு அனுமதி கொடுங்கள்.

உங்களை காயப்படுத்துவதாக இந்த கருத்துக்கள் அமைந்தால், மன்னியுங்கள்! இவை யாவும், உங்களைப் போன்றோரின் பெற்றோர்கள், உங்களிடம் சொல்ல முடியாமல் போன புலம்பிய புலம்பல்கள்.

SRI AYYAPPA SANGAM, Tiruchirappalli - 620 001.
No. 361

# வளம் பெருக்கும் வலம்புரிச் சங்கு பூஜை!


நமது இல்லம் செல்வச் செழிப்பில் மிதப்பதையும் அதிர்ஷ்டம் நம் வாசற்படியில் தவம் கிடப்பதையும் யார்தான் விரும்பமாட்டார்கள்? அப்படியொரு பாக்கியத்தை நல்கும் அற்புத வழிபாடுதான் **“வலம்புரிச் சங்கு பூஜை”!**

பொதுவாக நமது இறை வழிபாட்டிலேயே சங்குக்கு முக்கிய பங்கு உண்டு. சங்கு தர்மத்தின் வடிவம் என்பதால் பஞ்ச பாண்டவர்களின் கைகளில் ஒவ்வொரு விதமான பெயர்களில் விளங்குகிறது.

தருமர் வைத்துள்ள சங்கு ‘அனந்த விஜயம்’ என்றும், அர்ஜுனர் வைத்திருக்கும் சங்கு ‘தேவதத்தம்’ என்றும், பீமசேனன் வைத்திருக்கும் சங்கு, ‘மகாசங்கம்’ என்றும் நகுலன் வைத்திருக்கும் சங்கு, ‘சுகோஷம்’ என்றும் சகாதேவன் வைத்திருக்கும் சங்கு, ‘மணிபுஷ்பகம்’ எனறும் அழைக்கப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தன் இடக்கையில் வைத்திருக்கும் ‘பாஞ்சஜன்யம்’ என்ற சங்கு இறந்தவருக்கு நற்கதி அளிக்கக் கூடியது.



சங்குகளில் மணி சங்கு, துவரி சங்கு, பாருத சங்கு, வைபவ சங்கு. பார் சங்கு, துயிலா சங்கு, வெண் சங்கு, பூமா சங்கு ஆகிய எட்டு வகையும், அரிய வகையான வலம்புரிச் சங்கும் தோற்றங்களால் வேறுபட்ட இன்னும் 7 வகை சங்குகளும் மிகவும் சக்தி வாய்ந்தவை. இந்த பதினாறு வகை சங்குகளில் வலம்புரிச் சங்கு மிகவும் உயர்ந்ததும் தெய்வத்தன்மை கொண்டதும் ஆகும். வீடு கட்டும்போது வலம்புரிச் சங்கை முறைப்படி பூஜை செய்து, நிலைவாசற்படியின் மேல் வைத்து மூடி விட வேண்டும். இப்படிச் செய்வதால் அந்த வீடு செல்வச் செழிப்போடு திகழ்வதுடன் எந்த துர்சக்திகளும் தோஷங்களும் அந்த வீட்டை நெருங்காது.




சங்கு பூஜைக்கான
அறுங்கோண கோலம்

வீடுகளில் வலம்புரிச் சங்கை வைத்து பூஜை செய்வதால் பல நன்மைகள் பெருகும். பூஜை செய்த சங்கு நீரை வீட்டிலும் தன்மீதும் தெளித்துக் கொண்டால் உயிர்களைக் கொல்வதால் ஏற்படும் ‘பிரம்மஹத்தி தோஷம்’ அகலும் என்று வேதவாக்யம் கூறுகிறது.

**“சங்க மத்யே ஸ்திதம் தோயம் ப்ராமிதம் சங்கரோ பரி**
**அங்க லட்சணம் மனுஷ்யானாம் ப்ரம்ம்ஹத்யாதிகம் தகேத்.”**

## வலம்புரிச் சங்கு பூஜை

வெள்ளிக்கிழமை, பூச நட்சத்திர வியாழன் மற்றும் பௌர்ணமி தினங்களில் இந்தப் பூஜையைச் செய்வது நலம். கொடுக்கப்பட்டுள்ள 'அஷ்டலஷ்மி சங்கு கோல'த்தை பூஜை செய்யும் அறையில் போட்டு வைக்க வேண்டும். ஒரு பித்தளைத் தட்டின் மேல் நுனிவாழையிலை போட்டு, அதன் மேல் வலம்புரிச் சங்கை வைக்க வேண்டும். சங்கின் மேல் துளசி, பச்சைக் கற்பூரம், ஏலக்காய்த்தூள், சிறிது மஞ்சள்தூள் போட்டு நீர் ஊற்ற வேண்டும். அறுங்கோண கோலம் இட்ட மணைப்பலகை மேல் அதை வைத்து சந்தனம், குங்குமம் இட்டு அலங்கரிக்க வேண்டும். சங்கைச் சுற்றிலும், சிவப்புநிற பட்டுத்துணியை இட்டு வைக்க வேண்டும்.



பூஜை அறையில்
போட வேண்டிய
அஷ்டலஷ்மி சங்கு கோலம்

பூஜைக்காக செவ்வரளி மலர், தேங்காய், பழம், தாம்பூலம், லட்டு, ஜிலேபி முதலியவற்றை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஐந்து முகம் நெய் தீபம் ஏற்றி முதலில் விநாயகர் பூஜை செய்த பின் கற்பூர ஆரத்தி செய்துவிட்டு அன்றைய நாள், நட்சத்திரத்துடன் குடும்பப் பெயர்களைச் சொல்லி திருமகள் மற்றும் குபேரனுக்கான காயத்ரி மந்திரத்தைச் சொல்லி பூஜையைத் தொடங்க வேண்டும்.

கையில் சிவப்பு நிற வாசனை மலர்களை எடுத்துக் கொண்டு,

**"ஓம் தனலட்சுமியே போற்றி**
**ஓம் தான்யலட்சுமியே போற்றி**
**ஓம் கிரகலட்சுமியே போற்றி**
**ஓம் கஜலட்சுமியே போற்றி**
**ஓம் நாராயணர் இதயமே போற்றி**
**ஓம் நலம்தரும் நாயகியே போற்றி**
**ஓம் சௌபாக்கியம் தருவாய் போற்றி**
**ஓம் சுவர்ண லட்சுமியே போற்றி**
**ஓம் சங்கு உருவே போற்றி"** என்று சொல்லி அர்ச்சனை செய்த பிறகு,

**"ஓம் மகாலஷ்மியைச வித்மஹே விஷ்ணு பத்னியைச தீமஹி தந்தோ லஷ்மி ப்ரசோதயாத்"** என்று லஷ்மி காயத்ரி சொன்ன பிறகு குபேரனுக்குரிய துதியைச் சொல்ல வேண்டும்.

**"ஓம் குபேரனே போற்றி**
**ஓம் நிதிகளின் தலைவனே போற்றி**
**ஓம் நவநிதி உருவே போற்றி**
**ஓம் செல்வ நாயகனே போற்றி**
**ஓம் வடதிசைத் தலைவனே போற்றி**
**ஓம் செல்வ வளம் தருவாய் போற்றி"** என்று சொல்லி...

பிறகு,

**"ஓம் மநுஜவாஹ்ய விமான வரஸ்திதம்**
**கருட ரத்ன நிபம் நிதிதாயகம்**
**சிவசகம் முகுடாதி விபூஷிதம்**
**வரகதம் தநதம் பஜதுந்திலம்"** என்று சொல்லிக் கொண்டே மலர்களை எடுத்து சங்கு மேல் போட வேண்டும்.

**"ஓம் பாஞ்சஜன்யாய வித்மஹே பவமானாய தீமஹி தந்தோ: சங்க: ப்ரசோதயாத்"** என்று சங்கு காயத்ரியை மூன்று முறை சொல்லி, விழுந்து வணங்க வேண்டும்.

பின்னர் உங்களுக்குத் தெரிந்த மகாலஷ்மி, விஷ்ணு, குபேர துதிகளைச் சொல்லி வழிபடலாம். பூஜைப் பொருட்களை நிவேதனம் செய்து, ஆரத்தி காட்டிய பிறகு உங்களையே ஒருமுறை சுற்றிக் கொண்டு சங்கு பூஜையை நிறைவு செய்ய வேண்டும்.

வலம்புரிச்சங்கு பூஜை செய்து வளங்கள் எல்லாம் பெற வாழ்த்துக்கள்!

**When success comes in after hard work, the leader should give the credit of the success to the team members.**

**When failure comes, the leader should absorb the failure and protect the team members.**

**- Dr. Kalam**

**Where there is excellence,**
**explanations are not required.**
**Where explanations are required,**
**seldom you find excellence.**

**“By expressing our apology to people to whom we have caused hurt, we not only cleanse our heart, but also open their heart.**

**By forgiving people who have caused hurt to us, we give freedom to ourselves.**

**The power of apology is much deeper than mere words. We apologise not for the outcome, but because we know we were wrong. Even realising that we were wrong and we owe an apology is a cleansing experience.”**

INSTEAD OF USING OUR INTELLIGENCE
TO FIND FLAWS IN OTHERS,
LET US USE OUR INTELLIGENCE TO
CORRECT OUR OWN FLAWS.

# வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய சுருக்கமாக ஓர் யோசனை

தனியாக இருக்கும்போது உங்களது எண்ணங்களில் கவனமாக இருங்கள்.

உங்களுடன் மற்றொருவரும் இருக்கும் நேரத்தில் எண்ணம் தவிர சொற்களிலும் கவனமாக இருங்கள்.

பலரோடு சேர்ந்து இருக்கும் தருணத்தில்...**எண்ணம், சொல், செயல்** ஆகிய மூன்றிலும் கவனமாக இருங்கள். இதைக் கடைப்பிடித்தால் **உயர்வு நிச்சயம்!**

SOME PEOPLE

SET STANDARDS, OTHERS


TRY TO MATCH THEM



WHERE DO YOU SEE YOURSELF?

Don't be
ordinary

Be
extraordinary



**பல்வேறு தோஷங்களுக்கும் துன்பங்களுக்கும் ஜோதிட பரிகாரங்களைச் செய்தும் சிலருக்கு பலன் கிடைக்கவில்லையே! தோஷங்களும் துயரங்களும் நீங்க, உள்ளன்புடன் கடவுளை வழிபட்டால் போதாதா?**

மனதாலும் பிறருக்குத் தீங்கு நினைக்கக்கூடாது. புலன்களை அடக்கியாளும் தகுதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அறவழியில், தேவையான அளவு பொருளை ஈட்ட வேண்டும். சட்டதிட்டத்துக்கு உட்பட்டு வாழவேண்டும். கடமைகளைக் குறைவற நிறைவேற்ற வேண்டும். அறநெறி வழுவாது, ஒழுக்கத்துடன் திகழ வேண்டும். இப்படி வாழ்ந்தால், கிரகங்கள் எப்போதும் நம்மை வாழ்த்தும்!

# மீண்டும்

# கிடைக்காத சிம்மாசனம்

# தாயின் மடி